இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -04

# நேர்மை நெறி

ஏப்ரல் 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

(NERMAI NERI)

Rs.10

## தன்னலமற்ற மக்கள் சமுதாயமே ஊழலை ஒழிக்க முடியும்



## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

# பத்திரப் பதிவுத் துறையும், அதன் ஊழல் வருவாயும்

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

தற்போது பத்திரப் பதிவுத் துறையும், அதன் வருவாயும் மாநில அரசிடம் உள்ளது. இந்தத் துறையில், லஞ்சம், ஊழல், வரியேய்ப்பு, போன்றவை மிக மிக அதிகம் இவற்றின் காரணமாக, கருப்புப்_பணம் மலையளவுக்கு உயர்ந்துள்ளது. இந்தக் கருப்புப் பணமே நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் தடையாகவும், சவாலாகவும் உள்ளது என்ற உண்மையை எல்லா அரசியல் கட்சிகளும் நன்கு உணர்ந்திருக்கிறன.

சிறியதும் பெரியதுமான ஆயிரமாயிரம் விஷ வேர்களைக் கொண்டது கருப்புப்பணம் என்னும் மரம். அதை அழிக்க அல்லது வளர்ச்சியைத் தடுக்க, எந்த ஒரு அரசியல் கட்சியுமே முயன்றதில்லை. அதன் மூலம் அதிகமான லஞ்சப்பணம் பெற்றுக்கொண்டு நமது அரசியல்வாதிகள் எதையுமே கண்டு கொள்வதில்லை. அதைக் கொண்டு நன்கு அனுபவிப்பவர்களும் அவர்களே.

எப்படியெனில், இதுவரை நாம் ஒரு காலி மனையை ரூ 60 லட்சத்திற்கு விலை பேசி முடித்தபின் அந்த மனை நிலத்தின் 'மாநில அரசு வழிகாட்டுதல் விலையைப்' பார்ப்போம். அது (சுமார்) வெறும் 10 லட்சமாக இருக்கும். இந்தப் பத்து லட்சத்திற்கு 7% முத்திரைத்தாளும் 1% பதிவுக்கட்டணமும் செலுத்தி, அப்பகுதி சார் பதிவர் அலுவலகத்தில் மனையை நம் பெயரில் கிரயம் செய்து, பதிவு செய்து கொள்வோம். அரசு மதிப்பான 10 லட்சத்தை DD யாகவும் (வெள்ளையாக), மீதி 50 லட்சத்தைப் பணமாகவும் (கருப்பாக) விற்பவருக்குக் கொடுத்துவிடுவோம்.

அதாவது உண்மை (சந்தை) விலைக்கும், அரசின் (வழிகாட்டுதல்) விலைக்கும் இடையே “600% (ஆறு மடங்கு) முதல் 1000% (பத்து மடங்கு) வரை” விலை_வித்தியாசம் இருப்பதைக் காண்கிறோம். ஏன் இவ்விரு விலைகளுக்கிடையே இவ்வளவு #பெரிய வித்தியாசம்.? இதில் தான் அரசியல்வாதிகள் நிர்வாகம் உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால், அரசின் மதிப்புக் குறைவாக இருப்பது, மக்களுக்கு லாபமாகத் தெரியும். அதாவது சந்தை மதிப்பே அரசு மதிப்பாக இருக்கும் போது முத்திரைத் தாள்களுக்கு ஏழெட்டு மடங்கு #கூடுதலாக பணம் செலவாகும் என்ற விதத்தில்.

அதையே, இப்படி மாற்றிப் போட்டுப் பாருங்கள். அரசு மதிப்பை ஆறு மடங்கு உயர்த்தி, முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தை ஆறு மடங்கு குறைத்துப் பாருங்கள். சொத்து வாங்குவோருக்கு முத்திரைத் தாள் செலவும், அரசுக்கு பதிவு வருவாயும் கூடாமலும் குறையாமலும் பழைய அளவே இருக்கும். எந்த இழப்பும் இரு பக்கமும் இல்லாத போது, இரண்டு விலைகளையும் ஒரே விலையாக மாற்றியமைத்தால் ரியல் எஸ்டேடட் வியாபாரத்தில் கருப்புப் பணப் புழக்கமே இருக்காது அல்லவா.!!.

ஆனால் இப்படியொரு மாற்றத்தை ஏன் நமது அரசுகள் செய்வதில்லை.? என்ற கேள்வியிலேயே பதிலில் இருக்கிறது, இது அரசியல்வாதிகள் மற்றும் பண முதலாளிகளின் விஞ்ஞான_ஊழல்_தந்திரம் ஆகும். தந்திரம் என்னவெனில், வருடம் ஒன்றுக்கு 500 கோடி ரூபாய் லஞ்சம் மற்றும் ஊழல் மூலம் குவித்துவிடும் ஒரு அரசியல்வாதி அல்லது போதைப் பொருள் விற்கும் ஆசாமி, அப் பணத்தைச் சொத்தாக மாற்றிவைக்க நினைப்பார்கள். [முதல் Option: ரியல் எஸ்டேட், அடுத்து: கோல்ட், கடைசி Option: சுவிஸ் வங்கி] . ஊட்டியில் ரூ 450 கோடிக்கு ஒரு டீ எஸ்டேட்டை விலை பேசி முடிக்கிறார் அரசியல்வாதிஎன்று வைத்துக்கொள்வோம். எஸ்டேட்டின் அரசு விலை சுமார் 70 கோடி எனலாம்.

ஊழல் அரசியல்வாதிக்கு முன்னமே விவசாய நிலம், தியேட்டர், லாட்ஜ் இப்படி சில சொத்துக்கள் இருக்கும். சில லட்டர் பேடு போலி நிறுவனங்களைக் கூட தன் பெயரில் பதிவு செய்து வைத்திருப்பார். அவைகள் மூலம் 70 ... 80 கோடி வருமானம் வருவதாக வருமானவரி த்துறைக்குக் கணக்குக் காட்டி, வரியும் கட்டி, அத்தொகையை White account money யாக பேங்கில் வைத்திருப்பார். எஸ்டேட் கிரயத்தின் போது 70 கோடியை பேங்க் வழியாகக் கணக்கிலும், மீதி 380 கோடியை ரொக்கமாகவும்(கருப்பு பணம்) விற்பவருக்குக் கொடுத்து ஊழல் பணத்தைச் அசையாச் சொத்தாக்கி விடுவார்.

இப்போது நீங்களே கணித்திருப்பீர்கள். 'அரசு-விலை சந்தை-விலை' இரண்டும் ரூ 450 கோடியாக இருந்து, முத்திரைத்தாள் 1% ஆக வைத்தால், அந்த அரசியல் வாதி 450 கோடி வருமானத்திற்கான தொழிலையும் கணக்கையும் வருமானவரித் துறைக்குக் காட்ட வேண்டும் அல்லவா?.

- அரசியல்வாதி பதவியில் இருந்து கொண்டு இவ்வளவு பெரிய வருமானம் வருவதாகக் காட்ட முடியாது.
- அவர் தன் மனைவி மகன் மகள் பெயரில் லட்டர் பேடு நிறுவனங்கள் நடத்திக் கூட்டாக 450 கோடி சம்பாதித்தார்கள் என்று கணக்குக் காட்டி எஸ்டேட்டை வாங்கினாலும், 450 கோடிக்கு வருமான வரி மத்திய அரசுக்குக் கட்டியிருக்க வேண்டும்.
- ஊழல் பணத்தை குடோனில் கூட அடுக்கி பூட்டி வைக்கலாம் தான். ஆனால் வருமான வரித்துறை ரெய்டு வந்தாலோ, ஆட்சி மாறி ஊழல் தடுப்பு ரெய்டு வந்தாலோ பணத்தை அள்ளிச் சென்றுவிடுவார்கள். எனவே, முறைப்படியான வருமானவரியும் செலுத்த வேண்டி வரும்

எனவே ஊழல் மற்றும் சட்ட விரோத வருமானத்தை முதலீடு செய்ய முதல் சாய்ஸ், ரியல் எஸ்டேட்டாக இருக்கிறது. அரசு வழிகாட்டுதல் விலையைச் சந்தை விலை அளவிற்கு உயர்த்தியவுடன் ஊழல்கள் முழுமையாய் குறைந்துவிடும் என்று உறுதி கூறமுடியாது. ஆனாலும் கட்டுக்குள் இருக்கும். மேலும் ரியல் எஸ்டேட் தொழிலில் கருப்பு பணம் முற்றிலும் இருக்காது. பணம் வெள்ளையானால் அதற்கான வரி வருமானங்கள் அரசுக்கு வந்து சேரும்.

சிறிய அளவில் அசையாச் சொத்து வைத்திருப்பவர்களுக்கு, இந்தச் சட்டத்தால் எந்த பாதிப்பும் இருக்காது. நியாயமாக பணம் சம்பாதிப்பவர்களுக்கு ஆதாயமே உள்ளது. பத்திரப்பதிவின் போது பொய்யாக சொத்து மதிப்பைக் காட்டத் தேவையில்லை. ஆனால் முறையில்லாத வருமானத்தின் மூலம் மனைவி பெயரிலும் மகள் பெயரிலும் 100... 300... 500... 1000 கோடி என்ற அளவிற்குச் சொத்து வைத்திருப்பவர்கள், அதை விற்பனை செய்யும் போது, பெருந்தொகையினை (Capital gain) வரியாகக் மத்திய அரசுக்குக் கட்டவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

லஞ்சம் வாங்கும் அரசு ஊழியர்கள் மனைவி மகள் மகன் பெயரில் அசையாச் சொத்துக்கள் வாங்கிக் குவிக்க முடியாது. வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்தால் ஆதார் எண் காட்டிக் கொடுத்து விடும். எனவே பயம் காரணமாக லஞ்சம் கொஞ்சம் குறைய வாய்ப்புள்ளது.

கருப்புப் பண நடமாட்டம் குறைந்தால், வீட்டுமனை விலைகளும் குறையும். இவற்றால், சாதாரன மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் வீடுகள் கிடைக்கும்

**ஊழல் அற்ற அரசியலையும், கருப்புப் பணம்**
**புழங்காத பொருளாதாரத்தையும் ஆதரிப்போம்.**

# <u>கார்ப்பரேட் ஊடகங்களும், கதி கலங்கும் நூலகத் துறையும்!</u>

*- சாவித்திரி கண்ணன்*

அறம் (March 30, 2022)

***நாட்டில் நடக்கும் தவறுகளை தட்டிக் கேட்டு அதை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு பத்திரிகை துறைக்கு உள்ளது! ஆனால், சமீபகாலமாக அந்த தவறுகளில் தானும் சம்பந்தப்பட்டு ஆதாயம் அடைகிறது ஊடகத் துறை! அது தான் தற்போதைய நூலகத்திற்கான பத்திரிகைத் தேர்வில் வெளியாகியுள்ளது.***

ஒரு நாடு சிறந்ததாக உள்ளதா என்பதன் அடையாளங்களில் ஒன்று, அந்த நாட்டில் நூலகங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதாகும். அந்த வகையில் தமிழகத்தில் நூலகங்கள் பெரும் வீழ்ச்சியை கண்டு வருவது தொடர்பாக கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக எழுதி வருகிறேன். ஆயினும், அது நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே தான் உள்ளது.

சமீபத்தில் நூலகத் துறையில் தேவையின்றி வாங்கி குவிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பாக நமது அறம் இதழில் கவனப்படுத்தி இருந்தோம். மக்கள் சீண்டவும் மறுக்கும் பல பத்திரிகைகளை கமிஷன் கிடைக்கிறது அல்லது ஆளும் தரப்பிற்கு வேண்டப்பட்டவர்கள் என்பதற்காக வாங்கி அனுப்புகின்றனர். அவற்றின் போஸ்டல் உறை கூட கிழிக்கப்படாமல் உள்ளன! இந்த வகையில் மக்கள் வரிப் பணம் வீணாகிறது என விரிவாக எழுதி இருந்தோம்.

**<u>சீரழிவின் உச்சம் தொட்டுள்ள தமிழ் நாடு நூலகத்துறை சீர் பெறுமா?</u>**

அதன் எதிரொலியாக இதழ்களை தேர்ந்தெடுக்கும் ஒரு கமிட்டி போட்டனர். அந்த கமிட்டியால் தேர்ந்தெடுக்கப் பட்டவைகளை பரிசீலித்தால், மீண்டும் அதே தவறுகள் வெவ்வேறு வகைகளில் தொடர்வது தான் வேதனையானது. ஒரு சின்ன ஆறுதல் என்னவென்றால், முன்பு வந்து கொண்டிருந்த சாதி சார்ந்த பத்திரிகைகள் தொடங்கி பல மோசமான நூற்றுக்கு மேற்பட்ட இதழ்கள் தடுக்கப்பட்டுள்ளமையாகும்!





பல நல்ல பத்திரிகைகளுக்கு, நல்ல சிற்றிதழ்களுக்கு குறிப்பாக நல்ல தரமான இலக்கிய இதழ்கள், சமூக நோக்குள்ள இதழ்களுக்கு ஆர்டர்கள் கொடுத்துள்ளார்கள் என்ற வகையில் பாராட்டலாம்! பெண்கள், குழந்தைகள், அறிவியல், தொழில் நுட்பம், சமயம் தொடர்பானவற்றைப் பெரிய அளவு குறை சொல்ல முடியாது. அதே சமயம் பொருளாதாரம் எனும் தலைப்பின் கீழ் விவசாய இதழ்களையும், நம்ம குலசாமி என்ற இதழையும் கொண்டு வந்துள்ளது பொருத்தமற்றது. விவசாயம், கிராமத் தொழில்கள் என தனியாக வகைப்படுத்தி இருக்க வேண்டும். அதே போல தொழில் வணிக இதழ்கள் என தனித் தலைப்பின் கீழ் பத்திரிகைகளை வகைப்படுத்தி இருக்க வேண்டும்.

பொது தலைப்பின் கீழ் தேர்வான இதழ்களில் தான் படு குழப்பங்கள்! அதற்குள் ஜீனியர் விகடனும் வருகிறது, மோட்டார் விகடனும் வருகிறது. உயிர் சூழல் என்ற பறவைகள், விலங்குகள் சுற்றுச் சூழல் சார்பானவையும் வருகிறது, மார்க்சிஸ்ட், பெரியார் முழக்கம், சிந்தனையாளன் போன்றவை எல்லாம் கூட வருகிறது. இது தான் இருப்பதிலேயே படு அபத்தம். ஒரு பத்திரிகையின் பேசு பொருள் என்ன என்ற அடிப்படை புரிதல் கூட இல்லை. தலைப்பு வாரியாக எப்படி வகைப்படுத்தலாம் என்று கூட தெரியாமலா இருப்பார்கள்?

பொதுவாக மக்கள் நூலகத்திற்கு எந்த அரசியல் கட்சி செய்தித்தாள்களையும், இதழ்களையும் வாங்கக் கூடாது என முடிவு எடுக்க வேண்டும். திராவிட மற்றும் இடதுசாரி இதழ்கள் கணிசமான அளவில் தூக்கலாக இடம் பெற்றுள்ளதை தவிர்த்திருக்கலாம்! ஏனெனில், இதை சாக்கிட்டு, நாளை பாஜக, ஆர்.எஸ்.எஸ் பத்திரிகைகளும் நூலகத்திற்குள் நுழையும் ஆபத்துள்ளதே! அதே சமயம், காந்தி என்ற குழந்தைகள் இதழைத் தவிர காந்தியப் பத்திரிகைகள் எதுவும் இடம் பெறவில்லை. இந்த இதழ்கள் தேர்வில் படு குப்பையான பெயர் தெரியாத பல பத்திரிகைகள் ஆர்டர்களை பெற்றுள்ளதும், அதில் நின்று இரண்டாண்டுகள் கடந்த பல பத்திரிகைகளுக்கு ஆர்டர்கள் கொடுத்துள்ளதும், இதில் ஊழல்களும், வேண்டப்பட்டவர்களுக்கு அத்துமீறி சலுகை செய்யப்பட்டிருப்பதும் தெளிவாகிறது.

முதலாவதாக இந்தக் குழுவில் உள்ள ஒரு சிலர் எந்த ஒரு மெனக்கிடலையும் செய்யாமல் ஏற்கனவே அதிகாரிகள், அரசியல்வாதிகள் தீர்மானித்திருந்த சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டதோடு, தங்கள் பங்கிற்கு சில தகுதியற்ற பத்திரிகைகளுக்கு ஆர்டர் கிடைக்க துணை போயுள்ளனர். பல நல்ல பத்திரிகைகளை புரட்டிக் கூட பார்க்காமல் நிராகரித்துள்ளனர் என்றால், நம்மை யார் கேட்டுவிட முடியும் என்ற இறுமாப்பின்றி வேறில்லை!

அது மட்டுமில்லை, சும்மா சாணிப் பேப்பரில் இரண்டு, மூன்று பாரத்திற்கு கடனே என எதையாவது நிரப்பி ஒருகலர் அட்டை போட்டுவிட்டு 20 அல்லது 25 ரூபாய் விலை வைக்க வேண்டிய இதழுக்கு 40 முதல் 50 வரை போட்டு நூலகத் துறைக்கு மாத்திரமே அச்சிடக் கூடிய சில பத்திரிகைகளுக்கு எந்த கேள்வியுமில்லாமல் எப்படி ஆர்டர் தரப்பட்டது? பழைய அதே கேடி ஆசாமிகளே மீண்டும் நூலக ஆர்டர்களை வேறு பத்திரிகை மற்றும் வேறு நபர்கள் பெயரில் பெற்றுக் கொள்ள முடிந்தது எப்படி? ஊடக உரிமையாளர்கள் பெயரிலான இரண்டு டுபாக்கூர் சங்க நிர்வாகிகளும், அவர்கள் சம்பந்தப்பட்ட இதழ்களும் மீண்டும் ஆர்டர்கள் வாங்கிவிட்டனர். அவை சரியான பத்திரிகைகள் என்றால் கூட ஏற்கலாம்! இவர்கள் தான் நூலகத்துறையில் தலைமை தொடங்கி மாவட்ட வாரியாக உள்ள டி.எல்.ஒக்கள் வரை 'பல்க் பேமெண்ட்' என்று சொல்லி கையில் திணித்து, கையூட்டு கொடுத்து கறைபடுத்தியவர்கள்! இது சங்கங்களின் பெயரிலான ஒரு கார்ப்படேட் அணுகுமுறை!

விகடன் குழுமத்தில் இருந்து வரும் ஆனந்த விகடன், ஜீனியர் விகடன்,சக்தி விகடன், நாணய விகடன், அவள் விகடன், பசுமை விகடன், விகடன் இயர்புக் போன்ற இதழ்களுக்கு ஆர்டர்கள் போட்டது போதாது என்று அந்த குழுமத்தில் இரண்டாண்டுகள் முன்பாக நிறுத்தப்பட்டுவிட்ட சுட்டி விகடன், டாக்டர் விகடன் போன்ற இதழ்களுக்கு ஆர்டர் தரப்பட்டு உள்ளது. ஒரு இதழுக்கு ஆர்டர் தருவதற்கான அடிப்படை விதிகளில் ஒன்று அது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது என்பதன் அடையாளமாக கடைசி மூன்று

மாதங்கள் வெளி வந்த இதழ்களை விண்ணப்பிக்கும் போதே சமர்பிக்க வேண்டும். அப்படி இருக்க, எப்படி இந்த இதழ்கள் தேர்வுக்கு உள்ளாயின?

இவை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதை போல அந்த நிர்வாகம் டம்மி காப்பி தயார் செய்து தந்திருக்க வேண்டும். இப்படியாக எல்லோருக்கும் தெரிய நின்று போன பத்திரிகையை இப்படி டம்மி கொடுத்து பித்தலாட்டம் செய்து வாங்குவது ஒரு பாரம்பரிய பத்திரிகை நிறுவனத்திற்கு அழகா? அப்படி அவர்கள் செய்து தந்தாலும், "இது தவறு, அடுத்த ஆண்டு விண்ணப்பம் செய்யுங்கள்" என சொல்லி இருக்க வேண்டாமா? அதுவும், தவிர ஒரே நிறுவனத்தில் இருந்து வெளி வரும் பத்து பத்திரிகைகளுக்கு ஆர்டர் தருவது நியாயம் அல்லவே! பலருக்கும் பகிர்ந்து தருவது தானே முறை! ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே இதன் மூலம் பல கோடி ரூபாய் பெறுமான ஆர்டர்களை அள்ளிச் செல்வது எப்படி சரியாகும்?

இது போல காப்பரேட்மயமான சில பெரு நிறுவனங்களின் நூலக ஆதிக்கம் பட்டவர்த்தனமாகவே தெரிகிறது! மேலும் ஆர்.என்.ஐ (இந்திய பத்திரிகை பதிவாளர் சான்றிதழ்) நம்பர் கூட வாங்கியிராத சில நபர்கள் ஆர்டர்கள் எப்படிப் பெற முடிந்தது? அரசாங்க அனுமதி இல்லாத பத்திரிகைகளுக்கு இப்படி எல்லாம் ஆர்டர் தருவதற்கும், அதை நிர்பந்தித்து பெறுவதற்கும் இவர்களுக்கெல்லாம் கூச்ச நாச்சமே இல்லையா? இது சட்ட விரோதம்!

குழந்தைகளுக்கான 11 இதழ்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில், நின்று போன சுட்டி விகடனுக்கும், கல்கி குழுமத்தின் கோகுலத்திற்கும் ஆர்டர் தந்தேயாக வேண்டிய கட்டாயம் தான் என்ன? மருத்துவம் உடல் நலன் தொடர்பாக ஏழு இதழ்கள் தேர்வாகியுள்ள நிலையில் நின்று போன டாக்டர் விகடனுக்கு ஆர்டர் போடுவானேன்? அறிவியல் தொழில் நுட்பம் தொழில் சார்ந்த ஏராளமான பத்திரிகைகள் தேர்வாகியுள்ள நிலையில் 75 ரூபாய்க்கான மோட்டார் விகடன் எதற்கு ? இந்த வாய்ப்புகளை தொடர்ந்து சிறப்பாக வெளிவரக் கூடிய வேறு சிறு இதழ்களுக்கு தந்திருக்கலாமே?

ஒரே ஒரு பத்திரிகையை முழு சிரத்தையோடு கொண்டு வந்து கொண்டிருக்க கூடிய பல சிறு நிறுவனங்கள் - அதுவும் பல ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டு வருபவை - முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு உள்ளன! நின்று போன பத்திரிகைகளுக்கு ஆர்டர் வாங்கித் தான் பிழைப்பு நடத்த வேண்டிய நிலையில் விகடனோ மற்ற பிரபல நிறுவனங்களோ இல்லை! ஆனால், பல சிறு நிறுவனங்களுக்கு நூலக ஆர்டர் ஒரு மிகப் பெரிய சப்போர்ட்டாகும்! ஆனால், பெரிய ஆங்கில பத்திரிகை நிறுவனங்கள் அதிக வாய்ப்பை பெற்றுள்ளன! 90க்கு மேற்பட்ட ஆங்கில இதழ்கள் ஆர்டர் வாங்கியுள்ளன! கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு இதுவும் ஒரு சான்றாகும்!

விகடன் குழுமத்திற்கு மட்டும் இந்த பேவரிடிஷம் நடக்கவில்லை. சுமார் ஒரு டஜன் பத்திரிகைகள் எப்பவோ நின்று போன நிலையில் ஆர்டர் வாங்கியுள்ளன! ஆக, தங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக மக்கள் வரிப்பணத்தை அள்ளிக் கொடுத்து விடுவதா? அறிவுத் துறையில் இருப்பவர்களே இவ்வளவு மோசமாக நடந்து கொண்டால், இந்த நாட்டிற்கு விடிவு ஏது? பத்திரிகையாளர்களாக இருப்பவர்கள் சிறிய சந்தர்ப்பம் வாய்த்தால் கூட, ஊழல் அரசியல்வாதி களையும், ஊழல் அதிகாரிகளையும் மிஞ்சிவிடுவார்கள் என்றால், சொல்வதற்கே வார்த்தையில்லை. வருத்தமே மிஞ்சுகிறது.

# மோடியின் பெயரால் நடக்கும் மோசடி


Published on 15/03/2022 (18:42) | Edited on 15/03/2022 (18:48)

நக்கீரன் செய்திப்பிரிவு

உலகிலேயே அதிக உறுப்பினர்களை கொண்டவர்கள் நாங்கள் எனப் பெருமை கொள்கிறது பாரதிய ஜனதா கட்சி. தொண்டர்களிடம் நன்கொடை வசூலிக்கும் பிரச்சாரத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த டிசம்பர் மாதம் 25-ம் தேதி தொடங்கி வைத்தார்.

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்தநாள் மற்றும் தீனதயாள் உபாத்யாயாவின் நினைவு நாளையொட்டி 2022 பிப்ரவரி மாதம் 11-ம் தேதி வரை நன்கொடை வசூலிக்கும் பிரச்சாரத்தை 1000 ரூபாய் செலுத்தி பிரதமர் மோடியே முதல் ஆளாக துவக்கியும் வைத்தார். Narendramodi.in என்ற இணையப் பக்கம் வழியாகவும், NAMO App மூலமாகவும் மக்கள் நன்கொடை செலுத்த முடியும். அதற்கான Link-யும் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் பிரதமரே கொடுத்திருந்தார். பிரதமரே நிதி செலுத்தி நன்கொடை கேட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உடனடியாக நன்கொடை செலுத்தத் தொடங்கினர்.

பிரதமருடைய ட்விட்டர் பதிவின் கமெண்ட் பகுதியில் அஜய் சர்மா என்பவர் பி.ஜே.பி.க்கும், **Swachh Bharat** திட்டத்திற்கும் தலா 500 ரூபாய் செலுத்தி அதற்கான ரசீதை பதிவிட்டிருந்தார். நன்கொடைக்கான ரசீதை பி.ஜே.பி. கொடுத்திருந்தது. ஆனால் Swachh Bharat திட்டம் 2014-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி பிரதமர் தொடங்கி வைத்த அரசாங்கத்தின் திட்டம். அதற்கு எப்படி பி.ஜே.பி. என்கிற கட்சி நன்கொடை வசூலிக்க முடியும் என்ற பொறி நமக்கு தட்டியது. அதனையடுத்து விரிவான விசாரணையில் இறங்கினோம். ஊடகவியலாளர் அரவிந்தாக்ஷன் நேரடியாக அந்த செயலியைப் பயன்படுத்திய "அனுபவத்தை' விளக்கினார்.







"பிரதமர் மோடி, நன்கொடை செலுத்துங்கள் என கொடுத்திருந்த அதே லிங்கிற்குள் சென்று பார்த்தால் மேலும் அதிர்ச்சி காத்திருந்தது. 2015-ம் ஆண்டு ஹரியானா மாநிலம் பானிப்பட்டில் பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட மத்திய அரசின் **beti bachao beti padhao** என்ற திட்டத்திற்கும் கட்சி மூலம் நன்கொடை வழங்கலாம். அதேபோல விவசாயிகளுக்காக **kisan seva** என்ற திட்டத்திற்கும் நன்கொடை வழங்க முடியும் என தெரியவந்தது. உடனடியாக, **Swachh Bharat, beti bachao beti padhao, kisan seva, party** fund ஆகிய நான்கு விஷயங்களுக்காக தலா 100 ரூபாய் நன்கொடை செலுத்த முடிவெடுத்தோம். பெயர், செல்போன் எண், ஈமெயில் முகவரி கொடுத்த பின் தனித்தனியாக நன்கொடை வழங்கினோம்.

உடனடியாக, அதற்கான ரசீது நம்முடைய ஈமெயில் முகவரிக்கு வந்துவிட்டது. டெல்லியில் இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியின் மத்திய அலுவலகத்தின் பெயரில் பில் வழங்கப்பட்டிருந்தது. **Swachh Bharat, beti bachao beti padhao** ஆகியவை அரசாங்கத்தின் திட்டங்கள் என்பதால், அந்த திட்டங்களுக்காக நன்கொடை வசூலிக்க அனுமதி இருக்கிறதா எனக்கேட்டு சம்பந்தப்பட்ட இரண்டு அமைச்சகத்துக்கும் RTI மூலம் கேள்விகளை முன்வைத்தோம்.

**Swachh Bharat** திட்டத்தின் பேரில் நிதி வசூலிக்க யாருக்கும் அனுமதி இல்லை என்று **Ministry of Jal Shakti / Department of Drinking Water & Sanitation** பதில் கொடுத்தது. அதேபோல **beti bachao beti padhao** திட்டத்தின் பெயரிலும் யாரும் நிதி வசூலிக்க அனுமதியில்லை. குறிப்பாக NAMO App மூலம் நிதி வசூலிக்க சிறப்பு அனுமதி வழங்க எந்த விதிகளும் இல்லை என்று மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறை The Ministry of Women and Child Development பதில் வழங்கியது.

அந்த பதில்கள் நமக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தன. இந்தியாவின் பிரதமரே மத்திய அரசின் திட்டங்களின் பெயரில் பி.ஜே.பி.க்காக நன்கொடை வசூலிக்கிறாரோ என்ற சந்தேகம் எழுந்தது. ஒருவேளை NAMO App-க்கும் இந்தியாவின் பிரதமர் அலுவலகத்திற்கும் தொடர்பு இருக்கிறதா என்று அறிவதற்காக தகவல் தொழில்நுட்பத் துறையின் Ministry of Electronics & Information Technology அலுவலகத்திற்கு RTI சட்டத்தின் மூலம் விண்ணப்பம் செய்தோம். நம்முடைய விண்ணப்பம் Information Technology அமைச்சகத்தில் இருந்து பிரதமர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. பிரதமர் அலுவலகத்தோடு NAMO Appக்கு தொடர்பு இருப்பதற்கான எந்த ஆவணங்களும் இல்லை என்று பிரதமர் அலுவலகமே பதில் கொடுத்துவிட்டது.

**kisan seva** என்ற தலைப்பிலும் நன்கொடை வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசிடம் அப்படியொரு திட்டமே கிடையாது. ஆனால் அதன் பெயரிலும் பி.ஜே.பி. நன்கொடை வசூலித்து வருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று திட்டங்களுக்கும் நன்கொடை செலுத்தினால் பி.ஜே.பி. கொடுக்கும் ரசீதில் வருமான வரி கணக்கு எண் PAN -AAABB0157F என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாம் செலுத்திய நன்கொடைக்கு பி.ஜே.பி. வழங்கிய ரசீது உண்மையா என்பதை உறுதிப்படுத்த ஆன்லைன் மூலமாக பி.ஜே.பி.யில் உறுப்பினர் ஆவதற்கான கட்டணமாக 5 ரூபாயும், பங்களிப்பு நிதியாக 150 ரூபாயும் செலுத்தினோம். டெல்லியில் இருக்கும் மத்திய அலுவலகம் 24 மணி நேரத்திற்கு பிறகு நம்முடைய முகவரி உள்ளிட்ட அடையாளங்களை சரிபார்த்த பிறகு பி.ஜே.பி. உறுப்பினராக நம்மை உறுதிப்படுத்தியது. உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் பணம் செலுத்தியதற்கான ரசீது ஆகியவை ஈமெயில் மூலமாக நமக்கு அனுப்பப்பட்டது. நன்கொடை வழங்கியதற்கு கொடுத்த ரசீதில் இருப்பதும் உறுப்பினர் ஆனதை உறுதிப்படுத்தி அனுப்பிய ரசீதில் இருப்பதும் ஒரே AAA B B0157F என்ற ஒரே PAN நம்பர்தான். ஆக, அரசுத்திட்டங்களின் பெயரில் மட்டுமில்லாது விவசாயிகளின் பெயரிலும் பி.ஜே.பி. அக்கட்சியின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் நன்கொடை வசூலித்து வருகிறது.

இந்தியாவில் இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் நன்கொடை வசூலித்து வருகிறது. ஆனால் எந்த கட்சியும் அரசாங்கத்தின் திட்டங்களின் பெயரில் நிதி வசூலித்தது கிடையாது. அரசுத் திட்டங்களின் பெயரில் வசூலிக்கப்படும் நிதியை பி.ஜே.பி. என்ன

செய்கிறது? பாவப்பட்ட விவசாயிகளின் பெயரில் இல்லாத **KISAN SEVA** திட்டத்தின் பெயரில் வசூலிக்கப்படும் நிதி யாருக்காக செலவழிக்கப்படுகிறது என்ற கேள்விகளுக்கான விடை யாரிடம் கிடைக்குமென்று தெரியவில்லை.

ஒன்றிய அரசின் திட்டங்களின் பெயரில் பணம் வசூலிப்பதுடன் **'Party Fund'** என நேரடியாகவே கட்சி நிதி வசூலிக்கிறார்கள். இதுபோக '**others'** என்ற வகையிலும் நிதி செலுத்த முடியும். அதில் எதற்கான நிதி என்று குறிப்பிட வேண்டும். ராகுல்காந்தி எம்.பி. என்று குறிப்பிட்டபோதும் பணத்தை ஏற்றுக்கொண்டது பா.ஜ.க.வின் ஆப். அதுபோல ரஜினிகாந்த் என்று குறிப்பிட்டு 100 ரூபாய் செலுத்தியதற்கும் ஏற்றுக்கொண்டு ரசீது கொடுத்துள்ளனர். இப்படி எதன் பெயரில் வேண்டுமானாலும் யாரிடமும் நிதி வசூல் செய்யும் வகையில் இந்த செயலி உள்ளது.

பி.ஜே.பி.க்கு நன்கொடை வழங்குவோருக்கு **referral code** ஒன்று கொடுக்கப்படுகிறது. அந்த **referral code**-ஐ பயன்படுத்தி நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் நிதி செலுத்தினால் நம்மை உற்சாகப்படுத்த வெகுமதியும் கொடுக்கப்படும் என்கிறார்கள். கருப்புப்பணத்தை வெள்ளையாக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பி.ஜே.பி. அக்கட்சியின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் நுட்பமாக நிதி வசூலித்து வருகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது" என்கிறார்.

பிரதமரே நேரடியாக சம்பந்தப்படுவதால் உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் பி.ஜே.பி. நடத்தி வரும் நன்கொடை வசூல் குறித்து பாரபட்சமில்லாத விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் உண்மை கொஞ்சமாவது வெளிச்சத்திற்கு வரும் என்கிறார்கள் களச் செயற்பாட்டாளர்கள்.



# பாஜக அரசு இந்தியாவை திவாலாக்கிக் கொண்டுள்ளது!

***-சாவித்திரி கண்ணன்***

**அறம் (March 27, 2022)**

***கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இலங்கை தத்தளிக்கிறது. கிட்டத்தட்ட அத்தகைய ஒரு நெருக்கடியை நோக்கி இந்தியாவும் நகர்ந்து கொண்டிருக்கிறது! மூச்சை திணறடிக்கும் வெளி நாட்டுக் கடன்கள், கடுமையான உரத்தட்டுபாடு, வங்கிகளின் வாராக் கடன்கள்…உள்ளிட்டவை மிரட்டுகின்றன!***

அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் கண்மூடித்தனமான சொத்து குவிப்பும், நேர்மையின்மையும் ஏற்கனவே மக்கள் வாழ்க்கையை பின்னுக்கு தள்ளியுள்ளது ஒரு புறமிருக்க, நமது தற்சார்பின்மையும், இறக்குமதியை நம்பியே விவசாயம், பார்மஸி, பெட்ரோலியம்..உள்ளிட்ட பல துறைகள் இயங்குவதும் நமக்கு பல சிக்கலை தந்து கொண்டுள்ளன. வருங்காலத்தில் இவை வீரியமடையும்.

மேலும் நாம் அளவுக்கு அதிகமாக வாங்கி குவிக்கும் வெளி நாட்டுக் கடன்களும், அதற்கான நிபந்தனைகளும், வட்டியும் நம் கழுத்தை நெரிக்க தொடங்கியுள்ளன! இத்தனை சிக்கல்கள் இருந்தாலும், தன்னை வல்லரசாக இந்தியா காட்டிக் கொள்ள இராணுவத்திற்காக அதிக நிதி ஒதுக்கி கொண்டிருப்பதும் நம்மை வேகமாக பொருளாதார நெருக்கடியை நோக்கி தள்ளிக் கொண்டிருக்கின்றன! மொத்த பட்ஜெட்டில் சுமார் 30% த்தை ராணுவத்திற்கு ஒதுக்கிறது பாஜக அரசு!

மக்களுக்கு கணிசமான வேலை வாய்ப்பையும், பொருளாதார புழக்கத்தையும் உறுதி செய்து கொண்டிருந்த பல பொதுத்துறை நிறுவனங்களை முடக்கி, அவற்றை தனியாருக்கு தாரை வார்த்துக் கொண்டிருக்கும் பாஜக அரசின் போக்குகள் நிலைமையை மேலும் சிக்கலாக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகளின்படி தற்போதைய கடன் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 43%ஆக உள்ளது. 2021 நிதி ஆண்டின் இறுதியில் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதத்தை தொடும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடன்கள் வாங்கியதற்காக இந்திய அரசு வழங்கியுள்ள பத்திரங்களில், 28.6% பத்திரங்களுக்கான கால வரையறை ஐந்து ஆண்டுகளை விடவும் குறைவு. இந்த பத்திரங்களில் 39% வங்கிகளிடமும், 26.2% காப்பீட்டு நிறுவனங்களிடமும் உள்ளன என்கிறது அரசின் அறிக்கை.

காங்கிரஸிடமிருந்து நிர்வாகம் பாஜகவுக்கு கைமாறிய போது இந்தியாவின் வெளி நாட்டுக் கடன் 54 லட்சம் கோடியாக இருந்தது. மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு தனது கடைசி ஆண்டு காலத்தில் (2014) ரூ. 4.57 லட்சம் கோடி கடன் வாங்கியது. இதில் ரூ. 4.27 லட்சம் கோடி தொகை வாங்கிய கடனுக்கான வட்டிக்காக அளிக்கப்பட்டது. நாம் வாங்கும் கடனுக்கு 7 சதவீதம் முதல் 9 சதவீதம் வரை வட்டி கட்ட நேரிடுகிறது என்ற அவல நிலையை பொருட்படுத்தாமல் பாஜக அரசு ஆண்டுக்காண்டு வெளிநாட்டுக் கடனை அளவுக்கு மீறீ வாங்கி குவிக்கிறது. **இதன் விளைவாக நமது வெளி நாட்டுக் கடன் தற்போது 116 லட்சம் கோடியாக உயர்ந்துவிட்டது**. இந்தியா புதிதாக கடன் வாங்குவதே, ஏற்கெனவே வாங்கிய கடனுக்கு வட்டி கட்டத்தான் என்ற நிலையில் உள்ளது. இதைத்தான் கடன் பொறி என்கின்றனர்.

இந்த உலக வங்கி பன்னாட்டு நிதியம்..போன்றவை எல்லாம் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளை தங்கள் கட்டுப்பாட்டிலே வைத்துக் கொள்வதற்காக பணக்கார நாடுகள் செய்த சூழ்ச்சியே ஆகும். கடன்வலையில் சிக்க வைப்பதன் மூலம் இந்தியாவின் மிகச் சிறந்த இயற்கை வளங்களையும், முதல் தர உற்பத்தி பொருட்களையும் தங்களுக்கு இறக்குமதி செய்ய கட்டளை இடுகின்றனர் என்பது மட்டுமல்ல, நமக்கு தேவை இருக்கிறதோ இல்லையோ தங்கள் நாட்டின் உற்பத்தி பொருட்கள் சிலவற்றை நம் தலையில் தேவையில்லாமல் கட்டிவிடுகிறார்கள்!

கொரோனாவைக் காரணம் காட்டி நம்மை போன்ற வளரும் நாடுகளை மேலும் மேலும் கடன் வலையில் சிக்க வைக்கும் சூழ்ச்சிகளும் அரங்கேறின! கடந்த 2021 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு 4.6 பில்லியன் டாலர்களை ஆசிய வளர்ச்சி வங்கி கடனாக வழங்கி உள்ளது! ஆசிய வங்கி தடுப்பூசி கொள்முதலுக்காக 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்களையும், 300 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நகர்ப்புறங்களில் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தவும், நாட்டின் எதிர்கால தொற்றுநோய்க்கான தயார் நிலைக்காகவும் ஒதுக்கியது.

பாஜக ஆட்சிக்கு வந்ததில் இருந்து தயாரிக்கப்பட்டு வரும் ஒவ்வொரு நிதி நிலை உருவாக்கமும் சில தனிப்பட்ட பெருமுதலாளிகளை வளர்ப்பதற்காகவே உள்ளது! இதைத் தான் 2021-22 மத்திய பட்ஜெட் குறித்து பேசிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் “மத்திய பட்ஜெட் மிகவும் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. **இந்த பட்ஜெட் பணக்காரர்களால், பணக்காரர்களுக்காக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள ஒரு சதவீத மக்கள் நாட்டின் 73 சதவீத சொத்துக்களை கொண்டிருக்கின்றனர்” என தெரிவித்திருந்தார்**! நாளுக்கு நாள் எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல், கேஸ் போன்றவற்றின் விலையை ஏற்றியவண்ணம் உள்ளன! வெகு சீக்கிரம் இவை மத்தியதர வர்க்கத்திற்கு எட்டாக்கனியாகிடும்!

வங்கிக் கடன்களை தகுதி இல்லாத தனி முதலாளிகளுக்கு அள்ளி வழங்கி நாட்டை திவாலாக்கியதில் காங்கிரசைக் காட்டிலும் வெகு குறுகிய காலத்தில் விஞ்சிவிட்டது பாஜக அரசு! ஆட்சிக்கு வந்த எட்டாண்டுகளில் 12 லட்சம் கோடிக்கும் அதிகமான வாராக் கடன்களை விட்டுக் கொடுத்து தள்ளுபடி செய்துள்ளது மோடி அரசு. வாராக்கடன்கள் ஒரு பக்கம் மலைக்க வைக்கும் அளவுக்கு உயர்ந்து கொண்டே செல்கின்றன! பல ஆயிரம் கோடிகள் கடன் வாங்கிய விஜய் மல்லையா, நிரவ் மோடி ஆகியோரை மட்டுமல்ல, ஆன்மீகத்தின் பெயரால் பல ஆயிரம் கோடிகளை சுருட்டிக் கொண்டு வெளி நாட்டுக்கு தப்பிவிட்ட நித்தியானந்தா போன்றவர்களைக் கூட கைது செய்ய துப்பில்லாத அரசாகத் தான் பாஜக அரசு உள்ளது.

இவற்றை எல்லாம்விட நாம் முக்கியமாகக் கவலைப்படுவது நம் விவசாயம் என்பது. தற்போது வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ரசாயன உரங்களை மட்டுமே செய்யப்பட்டு வருவது தான்! இந்தியாவில் ரசாயன உரங்களை தயாரிப்பதற்காக தனியார் துறையில் 56 பெரிய ஆலைகள், 72 நடுத்தர மற்றும் சிறு ஆலைகள் இயங்கி வருகின்றன! இவற்றுக்கு ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடிகள் விவசாயிகளின் பெயரால் மானியமாகத் தரப்படுவது தான் இருப்பதிலேயே பெரிய ஊழலாகும்! ஏனெனில், உரமானியங்கள் என்ற பெயரில் பெரு நிறுவனக்களுக்கு சுமார் ஒரு லட்சம் கோடிகளுக்கு மேல் மானியம் தரப்படுகின்றது! அரசு சார்பில் வெறும் 9 பொதுத்துறை மற்றும் இரண்டு கூட்டுறவு உரத் தொழிற்சாலைகள் தான் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் வெளி நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 500 லட்சம் டன் ரசாயன உரங்களை இறக்குமதி

செய்கிறது இந்தியா! இதற்காக சில லட்சம் கோடிகள் விரயமாகின்றன! நாட்டை திவாலை நோக்கி நகர்த்தும் காரணிகளில் முக்கியமானது இந்த உர இறக்குமதி தான். இதிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது!






கடந்த இரண்டாண்டுகளாக உர இறக்குமதி தடைப்பட்டு வருகிறது. ரஷ்ய- உக்ரைன் போரைத் தொடர்ந்து ரஷ்யாவில் இருந்து 30 லட்சம் டன் பொட்டாஷை நாம் இறக்குமதி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம். சமீப காலமாக உரம் வாங்க முடியாமல் விவசாயிகள் படும்பாடு சொல்லிமாளாது. கால்கடுக்க காத்திருந்தாலும், கிடைக்காத நிலையில் விவசாயிகள் தனியார் உர குடவுன்களை அடித்து நொறுக்கி உரத்தை கைப்பற்றிச் செல்லும் சம்பவங்கள் உ.பியில் நடந்து கொண்டுள்ளன!

அப்போதைய காங்கிரஸ் அரசு ஒரு மிகப் பெரிய தவறை செய்தது. 2011-ம் ஆண்டில் சௌமித்ரா சௌத்ரி குழு பரிந்துரையின் அடிப்படையில் உரங்களின் விலையைத் தீர்மானிக்கும் உரிமையை உர நிறுவனங்கள் - முதலாளிகள் கையில் ஒப்படைத்தது. விவசாயிகளுக்கான மானியத்தையும் நேரடியாக கம்பெனிகளுக்கே கொடுத்து, செயல்படுத்தியும் வருகிறது மத்திய அரசு. மேலும், தேவைக்கேற்ப உரங்களை அரசை கேட்காமல் இறக்குமதி செய்யும் உரிமையையும் தனியாருக்கே தந்து விட்டது. இதன் விளைவாக உர நிறுவனங்கள் நிர்ணயிக்கும் தாறுமாறான விலை உயர்வை அரசாலும் தட்டிக் கேட்க முடியவில்லை.

உரத்தட்டுபாடு பெரும் கேடுகளை தோற்றுவிக்கும் முன்பாக விவசாயிகளை படிப்படியாக இயற்கை உரச் செயல்பாட்டை நோக்கி அரசு நகர்த்த வேண்டும். தீடீரென இலங்கையை போல இயற்கை உரத்திற்கு மாறுங்கள் என சொன்னால் நடக்காது. 60 ஆண்டுகளுக்கு முன்பு நாம் வெளி நாட்டு உதவி இல்லாமல் தான் விவசாயம் செய்தோம். பல்லாயிரம் ஆண்டுகளாக சுய சார்புடன் வாழ்ந்தோம். சுயசார்ப்பும். நேர்மையான கூட்டுச் செயல்பாடும் தான் வர இருக்கும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நம்மை தற்காக்கும்!

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## *நேர்மைகூட ஒரு போதைதான்..!*

ஒரு வியாபாரி தனக்கு பயணம் செய்ய ஒட்டகம் ஒன்று வாங்கி வர சந்தைக்குப் போனான். ஒட்டக வியாபாரியிடம் அப்படி இப்படி என பேரம் பேசி நல்ல விலைக்கு ஒட்டகத்தை வாங்கிக் கொண்டு ஓட்டி வந்தான்.

ஒட்டகம் வாங்கிய வியாபாரிக்கோ மகிழ்ச்சி. நியாயமான விலையில் நல்ல தரமான ஒட்டகம் கிடைத்தது என்று.வீட்டுக்கு வந்ததும் தன் வேலையாளை அழைத்து ஒட்டகத்தை கொட்டிலில் அடைக்க சொன்னான். அதற்கு முன்பாக ஒட்டகத்தின் மேலிருந்த சேணத்தை அவிழ்க்க முயற்சித்தான். அவனால் முடியவில்லை.

தன் வேலையாளை அழைத்து ஒட்டகத்தின் சேணத்தை அவிழ்க்க சொன்னான். ஒட்டகத்தின் மீதிருந்த சேணத்தை அவிழ்த்த வேலையாள், பொத் என ஏதோ கீழே விழுவதை கண்டு எடுத்துப் பார்த்தான். அது ஒரு சிறிய பொக்கிஷப்பை. உள்ளே பிரித்தால், ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தது. விலை மதிப்பற்ற நவரத்தின கற்கள். தகதகவென மின்னியது.

அதை எடுத்து கொண்டு முதலாளியிடம் ஓடி வந்து அதைக் காண்பித்தான். உடனே வியாபாரி, "அந்த பையை இப்படி கொடு, உடனே அந்த ஒட்டக வியாபாரியிடம் கொடுக்கணும்"னு சொல்லி புறப்பட்டான்.

பணியாளோ, "ஐயா இது யாருக்கும் தெரியப் போவதில்லை. இது இறைவனின் பரிசு. நாமே வைத்து கொண்டால் என்ன? தாங்கள் அதிகமாக வைத்துக் கொண்டு எனக்கு கொஞ்சமாகக் கொடுங்கள்" என மிகவும் வற்புறுத்தினான். வியாபாரியோ ஒத்து கொள்ளாமல் ஒட்டக வியாபாரியைப் பார்த்து ஒப்படைக்கப் புறப்பட்டுப் போனான்.

ஒட்டக வியாபாரியிடம் சேணத்தை அவிழ்த்த போது கிடைத்த பொக்கிஷப் பையை கொடுத்ததும் நன்றியோடு வாங்கி கொண்டவன், அந்த பொக்கிஷப் பையை வியாபாரியிடம் கொடுத்து, "உங்கள் நேர்மையை நான் பெரிதும் மெச்சுகிறேன். தங்களுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்புகிறேன். இதிலிருந்து உங்களுக்கு பிடித்தமான கற்களை சிலவற்றை எடுத்து கொள்ளுங்கள்" என்று நீட்டினான்.

அதற்கு அந்த வியாபாரியோ சிரித்துக் கொண்டே "உங்களிடம் இந்த பொக்கிஷத்தை தரும் முன்பே இரண்டு விலையுயர்ந்த ரத்தினங்களை நான் எடுத்து வைத்து கொண்டேன்" என்றான்.

உடனே ஒட்டக வியாபாரியோ கற்களை எண்ணி பார்க்க எதுவுமே குறையவில்லை. சரியாக இருந்தது கண்டு குழம்பினான்.

உடனே அந்த வியாபாரி..."நான் சொன்ன இரண்டு ரத்தினங்கள்.

1. எனது நேர்மை. 2. எனது சுயமரியாதை என்றான்" கம்பீரமாக

சிறிது கர்வமாகக் கூட நேர்மையாளனாக வாழ்வது பெரிய விஷயமல்ல. தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பமும், வாய்ப்பும், வாய்த்தாலும் நேர்மையாக வாழ வேண்டும். வாழ்வில் ஒரு நாள் நேர்மையையாய் வாழ்ந்து பார்த்தால் அதன் ருசி உணர்ந்து விட்டால், நாம் எதற்காகவும் நேர்மையை இழக்க மாட்டோம்.

**நேர்மை கூட ஒரு போதை தான், அதை அனுபவித்து விட்டால், அதற்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டு வர முடியாது - ஆனால் மன நிம்மதி கிடைக்கும்.**

## ஒரு அன்பான வேண்டுகோள்

அமைச்சர் திரு செந்தில் பாலாஜி மீதான கிரிமினல் குற்றங்கள் தள்ளுபடியானதை எதிர்த்து நாம் சட்டப் போராட்டம் நடத்தி வருகிறோம். சென்னை உயர்நீதி மன்றம் வரை இதுகாறும் நமது இயக்க உறுப்பினரும், தலைவருமாகிய திரு ந சுப்ரமணியன் அவர்கள் இலவசமாக நடத்தி வருகிறார்கள். வழக்கு தற்போது உச்சமன்றத்தைத் எட்டியுள்ளது. நமக்கு எதிராகப் பல மூத்த வழக்குரைஞர்கள் ஆஜராகின்றனர்.. நாம் சில மூத்த வழக்கறிஞர்களை இலவசமாக நடத்தித் தருமாறு வேண்டினோம். பலன் ஏதுமில்லை.

ஒரு நாள் வழக்கில் ஆஜராவதற்கே ரூபாய் மூன்று முதல் பத்து லட்சம் வரை கட்டணம் வசூலிக்கிறார்கள். 2022ம் ஆண்டு ஏப்ரல் நான்காம் தேதி அன்று வழக்கறிஞர் திரு பிரசாந்த் பூசன் என்பவர் இலவசமாக ஆஜர் ஆகிவிட்டார். அவருக்கு நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ளதால், ஒவ்வொரு முறையும் ஆஜராவது கடினம் என்று கூறிவிட்டார். எனவே, நம் நாட்டின் உச்ச நீதி மன்றத்தில் நியாயத்தை நிலை நாட்ட பல லட்சம் ரூபாய்கள் தேவைப்படுகின்றன.. எனவே உறுப்பினர்கள் தங்களால் இயன்றவரை நன்கொடை அளிக்குமாறு வேண்டுகிறோம்.

ஊழலை ஒழிக்க ஆர்வமாக உள்ள பொது மக்களிடமிருந்தும் கீழ்க்கண்ட இயக்கத்தின் வங்கிக்கணக்கில் நன்கொடையாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஆர்வமுள்ள பொது மக்களும், உறுப்பினர்களும், பணத்தைக் கீழ்க்கண்ட நமது வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம்.

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

---

<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>

## காந்திஜி கொடுத்த பில்

**காந்திஜி தென் ஆப்பிரிக்கவில் இருந்தபோது அவரது மகன் மணிலால் தன் குடும்பத்தினருடனவரைக்காண வந்திருந்தார். காந்திஜி இருந்த போனிக்ஸ் ஆசிரமத்திலேயே அவர்களும் தங்கினர்.**

**நான்கு நாட்கள் சென்றதும் மணிலாலும் அவரது குடும்பதினரும் இந்தியா திரும்புவதற்காக காந்திஜியிடம் விடை பெற்றனர். அப்போது காந்திஜி ஓர் பில்லை மணிலாவிடம் நீட்டினார். பில்லை வாங்கிப் பார்த்த மணிலால் அதிர்ந்தார். காரணம்---**

**அவரும் அவரது குடும்பத்தாரும் ஆசிரமத்தில் தங்கியிருந்த போது அவர்களுக்கு வழங்கப்பட்ட சிற்றுண்டி, சாப்பாடு ஆகியவற்றுக்காக, அவர்கள் செலுத்த வேண்டிய பணம் பற்றிய பில் தான் அது.**

**மணிலாலின் குழப்பத்தைக் கவனித்த காந்திஜி, “நீ என் மகனாக இருந்தாலும், இந்த ஆசிரம விதிகளுக்குக் கட்டுப்பட்டவன். ஆகவே பில்லுக்குரிய கட்டணத்தைச் செலுத்திவிட்டுச் செல்” ! என்றார்.**

**காந்திஜியின் சொல்லை மறுக்க முடியாத மணிலால், பில்லுக்குரிய கட்டணத்தைச் செலுத்திவிட்டே புறப்பட்டார்.**

## படம் காட்டுபவன் பிழைத்துக் கொள்கிறான்.

ஒரு காட்டில் வாழ்நாள் முழுக்க வேட்டையாடி அலுத்துப்போன புலி ஒன்னு ஒரு தொழிற்சாலை ஆரம்பிச்சுது. அங்கே ஒரு எறும்பு வேலை செஞ்சுது. அதுபாட்டுக்கு வரும் சுறுசுறுப்பா எல்லா வேலைகளையும் செஞ்சு முடிச்சிட்டு சாயந்திரம் ஆனா வீட்டுக்கு போயிடும். புலியாருக்கு ஏக சந்தோசம்; கணிசமான லாபமும் கிடைச்சுது.

நல்லாத்தான் போய்கிட்டிருந்தது, நம்ம ஆட்சியாளர்களுக்கு தோனுற மாதிரி நடு ராத்திரியில் திடீர்ன்னு புலியாருக்கு ஒரு ஐடியா தோனுச்சு. எறும்பு தனியாவே வேலை செய்யுதே; அதை கண்காணிக்கற அளவுக்கு நமக்கும் போதுமான அறிவு இல்லை, நாம எறும்பை கண்காணிக்கவும் ஆலோசனை சொல்லவும் ஒரு உற்பத்தி மேலாளரை **(production manager)** நியமித்தால் உற்பத்தி அதிகமாகும்னு ஒரு தேனீயை கொண்டு வந்தது.

அந்த தேனீயும் வேலையில் ஒரு புலி தான். பல கம்பெனிகளில் வேலை செய்த பழுத்த அனுபவசாலி (இப்போ அந்த கம்பெனியெல்லாம் இருக்குதான்னு கேக்காதிங்க). அந்த தேனீ சொல்லுச்சு, "பாஸ் எறும்பை அதன் போக்குல விட முடியாது, அதுக்கு முறையான ஒர்க் ஷெட்யூல் போட்டுக் கொடுத்தால் இன்னும் கூடுதலா வேலை வாங்கலாம். அதுக்கு நிறைய வேலை இருக்கு; எனக்கு ஒரு செக்ரட்ரி வேணும்", என்றது..

புலிக்கு ஏக சந்தோஷம் இந்த தேனீ என்னமா யோசிக்குது; நமக்கு இவ்வளவு நாளா இது நமக்குத் தோனலையேன்னு ஒரு முயலை செக்ரட்டரியாக்குச்சு. அத்தோட புலியார் நமக்கும் கொஞ்சம் தெரியும்னு காட்டிக்க, "ஆள் போட்டாச்சு இனிமே எனக்கு தினமும் வேலை முன்னேற்றம் குறித்து ரிப்போர்ட்டை வரைபடமாகவும் அட்டவனையாவும் கொடுக்கனும்", என்றது.

"ஓகே பாஸ் அதுக்கென்ன, பிரமாதமா செஞ்சிடலாம் அதுக்கு ஒரு கம்ப்யூட்டர், பிரின்டர், புராஜக்டர் எல்லாம் வேணுமே" என்று கேட்டது. அப்படியே வாங்கிகிச்சு ஒரு கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்டும் பூனை ஒன்றின் தலைமையில் அமைச்சாச்சு.

இப்போ ஏகப்பட்ட கெடுபிடி நெருக்கடிகளால் விரக்தியடைந்த அந்த எறும்போட வேலையில் ஒரு தொய்வு வந்துச்சு. ஆகவே, உற்பத்தி குறைந்தது. புலி நினைச்சுது, எல்லாம் சரியா இருந்தும் ஏனிப்படி? தேனீயோட ஐடியாக்களை எறும்புக்கு விளக்கமா எடுத்துச் சொல்ல ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை போடுவோம்னு ஒரு குரங்குக்கு அந்த வேலையை கொடுத்தது. ஏற்கனவே டல்லான எறும்பை இப்போது குரங்கும் அதன் பங்குக்கு குழப்ப அன்றய தினத்துக்காக திட்டமிடப்பட்ட வேலைகளை அன்றைக்கே முடிக்காமல் போனது எறும்பு. மேலும் உற்பத்தி குறைவு; நஷ்டத்தில் இயங்கியது ஃபேக்டரி.

எதைத்தான் தின்னா பித்தம் தெளியும்' என்ற மனநிலைக்கு ஆளான புலியார் நஷ்டத்தை சரி செய்ய என்ன செய்லாம்னு ஆராய ஆந்தையை நியமிச்சது. ஆந்தை மூன்று மாத ஆராய்ச்சிக்கு பின் கடைசியா இப்படி சொன்னது. "தொழிற்சாலையில் தேவைக்கு அதிகமா ஆள் இருப்பதே காரணம் யாரையாவது வேலையை விட்டு எடுத்துட்டா நிலைமை ஓரளவு சீராகும்"

"யாரை எடுக்கலாம் அதையும் நீயே சொல்லிடு" என்றது புலி. "அதிலென்ன சந்தேகம் சரியாக வேலை செய்யாத அந்த எறும்பைத்தான்" என்று அதிரடியாகச் சொன்னது ஆந்தை. இப்படித்தான் உலகெங்கும் எதுவும் செய்யாமலே படம் காட்டுபவன் பிழைத்துக் கொள்கிறான். வேறெதுவும் தெரியாமல் **வேலையை மட்டுமே செய்பவன் பாதிப்புக்கு உள்ளாகிறான்**.

# *தலைமுறை தாண்டிய நாணயம்!*

*ஒரு குடும்பத்தில் தந்தை இறந்து போனார். வயதுக்கு வந்த மகன் குடும்பப் பொறுப்பு ஏற்றான். அப்பா இறந்த பிறகு அவரது டைரியில் இருந்த குறிப்பு ஒன்று சற்றே அதிர்ச்சி தந்தது*. *அதில் நண்பரிடம் ஒரு லட்சம் கடனாக வாங்கியிருப்பதைத் தந்தை குறிப்பிட்டிருந்தார். அவர் கடன் வாங்கிய விபரம் குடுபத்தில் யாருக்கும் தெரியவில்லை*

*இறப்பின் போதும்,இறப்பிற்குப் பிறகும் கடன் கொடுத்த அந்த அப்பாவின் நண்பரை வேறு வேறு இடங்களில் சந்தித்து விட்டான். அவரும் இவனிடம் நலம் விசாரித்ததோடு சரி*. *அவனது அப்பாவுக்கு கொடுத்திருந்த கடன் குறித்து பேசாதது ஆச்சரியம் தந்தது. எனவே ந்தையின் நண்பரைத் தேடிச்சென்றான்; சந்தித்தான்; விவரம் சொன்னான்*.

*அவர் மெதுவாகச் சொன்னார், "உங்க அப்பா எனக்குப் பல நேரங்களில் உதவியிருக்கிறார். அவர் ஒரு சமயத்துல உங்க அம்மா உடல் நலம் பாதிக்கப்பட்டபோது கேட்டார். கொடுத்தேன்*.

*அதுக்கு எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. திடீர்னு உங்கப்பா இறந்துட்டார்*.

*இந்த நிலையில் எந்த ஆதாரமும் இல்லாம, உங்கப்பா எங்கிட்ட கடன் வாங்கியிருக்காருன்னு கேட்குற மனம் எனக்கு வரல*.

*அதுக்கு முக்கிய காரணம், கடன் வாங்கும்போதே இது வீட்டிற்குத் தெரிய வேண்டாம்னு சொன்னார்.* *அவர் இறந்த பிறகும் அவர் வார்த்தைக்கு மதிப்பளிப்பதுதான் நியாயம்னு பட்டது. அதனால நானும் அதை விட்டுட்டேன்" என்றார்*.

*எங்கப்பா கையெழுத்துப் போட்டு கடன் வாங்கலேனாலும், அதைத் திரும்பக் கொடுக்குறது தான், அவரோட மகனுக்கு அடையாளமாக இருக்கும் என்ற மகன், கையோடு கொண்டு சென்றிருந்த பணத்தைத் திரும்பக் கொடுத்தான், நண்பர் நெகிழ்ந்தார்*. *பண்பும் செயலும்தான் ஒருவனை உயர்த்தும். மதமோ சாதியோ,வசதியோ அல்ல*.

*இந்தச் சம்பவத்தில் இரண்டு நல்லவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்*. *இதுதான் வழக்கு மொழியில் சொல்வார்கள்*, ***நல்லவர்களுக்கு எழுத்து தேவையில்லை; கெட்டவர்களுக்கு எழுதியும் பயனில்லை** என்று*.

*ஒருவன் நல்லவனாகவும் கெட்டவனாகவும் உருவாகச் சூழ்நிலைதான் பெரும்பங்கு வகிக்கிறது*. *தப்புச் செய்யச் சூழல் அமையாதவரை எந்த மனிதனும் நல்லவந்தான் என ஒரு வாக்கியம் உண்டு*.

*சேற்றிலும், செந்தாமரையாக வளர்வதே முக்கியம்*.

***தப்பு செய்ய வாய்ப்புக் கிடைத்தும், வாய்மையோடும், சூழல் அமைந்தும் நேர்மையோடும் வாழ முயல்பவனே நல்லவன்*.**

**மனிதகுலத்தில் நல்லவர்கள் என்ற இனம் அழிந்து வரும் இனமாக அடையாளம் காட்டப்படுவது வேதனையளிக்கிறது*.**

## செயற்குழு கூட்டம் (26-04.2022)

**இன்று** (25-12.2021) **நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. சில எதிர்பாராத காரணங்களால் தலைவர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கூட்டத்தில் மற்ற செயலாளர்களும் 2 பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..**

1) ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் டிசம்பர் 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேறியது.

2) உறுப்பினராவதற்கு வந்த விண்ணப்பங்கள் கீழ்வருமாறு:-
   - திரு வி சந்திரன் அவர்கள் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக;
   - திரு ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆண்டு உறுப்பினராக;
   - திரு ராஜேஷ் கணேசண் அவர்கள் ஆயுள் உறுப்பினராக;

   திரு வி.சந்திரன் அவர்களின் விண்ணப்பம் மீண்டும் சரி பார்த்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும். திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் இவ்வியக்கத்தின் முன்னாள் மேலாளராகப் பணி புரிந்தவர், அவருடைய பழைய அலுவலக ஆவணங்களை சரி பார்த்து, அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும். திரு ராஜேஷ் கணேசன் அவர்களின் விண்ணப்பத்தில் ஆதார் கார்டு இணைக்கப்படவில்லை. உறுப்பினரின் ஆதார் கார்டு கிடக்கப்பெற்றவுடன் அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

3) 2022-2025 ஆண்டுக்கான நிர்வாகக்குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் குழு அமைக்கவுள்ளது. திரு வி முத்துசாமி அவர்களை தேர்தல் குழுத் தலைவராக நியமிக்க முடிவெடுக்கப்பட்டது

4) நமது இயக்கத்தின் அடுத்த நிர்வாகக்குழுக் கூட்டம் ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரம் நடத்த வேண்டுமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

இறுதியில் பொது செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ந.சுப்ரமணியன் — வி.கார்திகைராஜன்
தலைவர் — பொதுசெயலர்

---

**<u>இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:</u>**

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**
திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

**குறிப்பு: சில தவிர்க்க முடியாத காரணங்களால் தலைவர் மடல் பிரசுரிக்க முடியவில்லை. அடுத்த இதழில் தொடரும்**

இரவிபுத்தன்துறையில் பைக்கில் பாறைகள் கொண்டு சென்றதாக கணக்கு

# அதிமுக ஆட்சியில் கடலரிப்பு தடுப்புசுவர் கட்டியதில் ₹64.34 லட்சம் ஊழல்

**செயற்பொறியாளர் உட்பட 4 பேர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குபதிவு**

**நாகர்கோவில், மார்ச் 16:** குமரி மாவட்ட கடலோர பகுதிகளில் கடல் அரிப்பை தடுக்க தூண்டில்வளைவுகள், கடல் அரிப்பு தடுப்பு சுவர்கள் அமைப்பது வழக்கம். இதற்காக அரசு கோடிக்கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இதில் இரவிபுத்தன்துறை கடற்கரை பகுதியில் கடலரிப்பு தடுப்பு சுவர் கட்டியதில் ஊழல் நடந்திருப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் பல் வேறு திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கப்பெற்று வழக்குபதிவு செயயப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரம் வருமாறு:

விளவங்கோடு தாலுகாவில் (தற்போது கிள்ளியூர் தாலுகா) இரவிபுத்தன்துறை கடலில் 750 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு தடுப்பு சுவர் அமைக்க ₹3 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மணவாளக்குறிச்சி சேரமங்கலம் பகுதியை சேர்ந்த டி.சி.ரமேஷ் என்பவருக்கு பணி ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 11.1.2017 அன்று பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடலில் அரிப்பு ஏற்படாமல் தடுக்கும் வகையில் குவாரிகளில் இருந்து 1000 முதல் 1500 கிலோ வரை எடை கொண்ட பாறைகள் உதவியுடன் லேயர் மற்றும் ஆர்மர் பேக்கிங் செய்வது இந்த கடல் அரிப்பு தடுப்பு சுவர் பணி ஆகும். இதற்காக பாறாங்கற்கள் டிப்பர் லாரிகளில் ஏற்றப்பட்டு பூந்துறையில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான எடைமேடையில் எடைபோடப்படும். இரவிப்புத்தன்துறையில் உள்ள பணியிடத்தில் இறக்கப்படும். பணியிடத்தில் கற்கள் கொட்டப்பட்டதைகள மேற்பார்வையாளர் உறுதி செய்ய வேண்டும்.

1.11.2017 முதல் 20.1.2018 வரை இந்த பணிகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

அதன்படி மொத்தம் 16 ஆயிரத்து 482.24 மெட்ரிக் டன் கற்கள் கடற்கரையில் கொட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை எம்.புக் விபரப்படி ₹2 கோடி 80 லட்சத்து 42 ஆயிரத்து 534 ஆகும்.

இதில் பணியில் இருந்த வாகனங்கள் பயண பதிவு, விலைபட்டியல், எம் புத்தகத்தில் உள்ள வாகன எண்கள் ஆய்வுசெய்யப்பட்டன. அதில் டிஎன்72 சி 0797 என்பது லாரி அல்ல என்று நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் மூலம் உறுதி செய்யப்பட்டது. மேலும் அது இருசக்கர மோட்டார் சைக்கிள் (எம் 80) மற்றும் டிஎன் 30 ஏஎக்ஸ் 8336 லாரி அல்ல அது மினி டெம்போ ஆகும். இதன் கொண்டு செல்லும் திறன் 745 கிலோ ஆகும். அதிகாரிகள் கூட்டு சேர்ந்து வாகன எண்களை முறைகேடாக பதிவுசெய்துள்ளனர். குறிப்பிட்ட வாகனங்களில் 1000 முதல் 1500 எடை கொண்ட கற்கள் கொண்டு செல்ல முடியாது. ஆனால் இந்த இரண்டு வாகனங்கள் மூலம் 118 மெட்ரிக் டன் வீதம் கற்கள் கொண்டுவரப்பட்டதாக அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கல்குவாரி உரிமையாளர்கள் அறிக்கைபடி 475.44 மெ.டன் கற்கள் மட்டுமே பணியிடத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி மொத்தம் 16482.24 மெட்ரிக் டன்களுக்கு பதிலாக 475.44 மெட்ரிக் டன் கற்கள் மட்டும் கொண்டுவரப்பட்ட நிலையில் 16006.8 மெட்ரிக் கடன் கற்கள் பணியிடத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருமெட்ரிக்டன்-க்கு ₹402 வீதம் ₹64 லட்சத்து 34 ஆயிரத்து 733 ஊழல் நடந்து அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

1.11.2017 முதல் 31.10.2018 வரை அரசால் ஒதுக்கப்பட்ட நிதியை தவறாக பயன்படுத்தும் நோக்கத்துடன் தவறான பயண பதிவேடு வடிவமைக்கப்பட்டு பொய்யான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த பணிக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்ட கடலரிப்பு தடுப்பு பிரிவு செயற்பொறியாளராக இருந்த கிறிஸ்து நேசகுமார், கோதையாறு உதவி திட்ட குழித்துறை உதவி கோட்ட உதவி செயற்பொறியாளர் பணியில் இருந்த அர்ஜுனன், தக்கலை கடலரிப்புதடுப்பு கோட்ட உதவி பொறியாளர் தாணுமூர்த்தி, ஒப்பந்தகாரர் ரமேஷ் ஆகிய 4 பேர் மீதும் குமரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டர் சிவசங்கரி வழக்குபதிவு செய்து இன்ஸ்பெக்டர் ரெமா விசாரணை நடத்தி வருகிறார்.

அதிமுக ஆட்சி காலத்தில் குமரி மாவட்டத்தில் கடலரிப்பு தடுப்பு சுவர் அமைக்கப்பட்டதில் நடைபெற்ற இந்த ஊழல் விவகாரம் குமரி மாவட்ட பொதுப்பணித்துறையினர், கடலோர கிராம மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன் Wed, 16 March 2022
https://epaper.dinakaran.com/c/66849544

THE HINDU
SATURDAY, MARCH 5, 2022

# ED attaches assets of former MES chief engineer, 2 others

**Probe under Prevention of Money Laundering Act**

SPECIAL CORRESPONDENT
KOCHI

- Official allegedly collected 1% of tender value from contractors for awarding works
- Attached assets included cash worth ₹4,01 crore, and 6.63 kg of fine gold valued at ₹3.45 crore

The Kochi unit of the Enforcement Directorate (ED) has provisionally attached assets worth ₹7.47 crore in a CBI case against Rakesh Kumar Garg, former Chief Engineer (Naval Works), Military Engineer Services (MES), Katari Bagh, Naval Base, Kochi.

They include cash worth ₹4.01 crore, and 6.63 kg of fine gold valued at approximately ₹3.45 crore, from Rakesh Kumar Garg, Sanjeev Khanna and Sanjeev Kumar Aggarwal.

The ED initiated investigation under the provisions of the Prevention of Money Laundering Act (PMLA), based on an FIR under Section 120B of IPC r/w Sections 7, 8, 10 and 12 of the Prevention of Corruption (PC) Act, 1988, registered by CBI, AC-1, New Delhi, in 2018 against Rakesh Kumar Garg, Pushkar Bhasin, Praful Jain, Kanav Khanna, Sanjeev Khanna, Subodh Jain, Chanchal Jain and other unknown public servants and private persons. It was alleged that Rakesh Kumar Garg, who was posted as Chief Engineer (Naval Works), Military Engineer Services (MES), at Katari Bagh, Naval Base, Kochi, since 2017, had indulged in corrupt practices by way of demanding and collecting illegal gratification of 1% of the tender value from contractors, for issuing various civil contracts in the Naval Base. A probe under PMLA 2002 revealed that Rajesh Kumar Garg, Kanav Khanna, Sanjeev Khanna, and Sanjeev Aggarwal had by commission of 'scheduled offence' and other offences relatable to the 'scheduled offence', derived the proceeds of crime in the form of the said cash and gold. Further investigation is in progress.

MOVIE LAND
"A BOLD NEW VISION. AMAZING ON
"EDGE-OF-YOUR-SEAT ACTION FROM START TO FINISH

# Irregularities in managing PSUs cost TN ₹337 cr

Julie.Mariappan
@timesgroup.com

**Chennai:** The Comptroller and Auditor General of India has found deficiencies in the management of public sector undertakings – Tangedco, Tansidco and Tiic. It cost the exchequer ₹337 crore, a report submitted in the assembly on Thursday said. The deficiencies include failure of Tangedco to factor transmission loss in the energy purchase agreements with solar power generators, resulting in additional expenditure of ₹245 crore.

Tangedco entered into a long-term energy purchase agreement for 25 years with 86 solar power generators under a preferential tariff scheme between 2015 and 2019. The agreement required that the meters should be installed and connected at the point of inter-connection between the electrical system of the generator and the transmission/ distribution system, at the cost of the generator. However, the generator installed the energy accounting meters at the generating end. "Tangedco failed to ensure installation of energy accounting meters at the sub-station's end and the payment to the generators were being made based on the energy recorded at the generating end". Consequently, the transmission loss between the generating stations and the sub-stations was absorbed by Tangedco, the report said. The transmission loss absorbed by Tangedco during the period was 406 million units.

## ENERGY PURCHASE

The audit also reported failure of Tangedco to revise the quantum of power allotted based on the outage of open access generators and to restrict the adjustment to entitled quantum which resulted in excess adjustment of power to consumers, leading to loss of ₹53 crore. In its reply in July last year, the government said that show cause notices were issued to the generators for recovery of the amount. Similarly, failure to monitor the connected load of LT Tariff IIIA consumers and revise the tariff to LT IIIB for exceeding the prescribed level of 12KW had resulted in loss of ₹9.11 crore. It was found that the connected load of 1,502 consumers were up to 51KW during August 2017 to March 2021. "It is pertinent that Tangedco has computerised the LT billing in the year 2008 itself and the entire data of LT consumers are available at head office," the report said.

In the case of Tamil Nadu Small Industries Development Corporation Limited, the CAG report said the PSU did not conduct any demand survey before finalising seven sites and developing them as industrial estates at Katuvananjur in Villupuram Parvathanahally in Dharmapuri, Eachambadi in Dharmapuri, Mallur in Ariyalur, Periyanesalur in Cuddalore, Sakkarakottai in Ramanathapuram and Vettambadi in Namakkal. The failure to assess the demand resulted in non-saleability of the plots and consequent unproductive investment of ₹28.5 crore. Except in Eachampadi estate, 90% of the plots remained unsold in other estates.

# ₹17.54 crore fraud slur on Pallavaram municipality

Komal Gautham
@timesgroup.com

**Chennai:** The erstwhile Pallavaram municipality was involved in corruption of ₹17.54 crore under a solid waste management project in 2008, said the Comptroller and Auditor General of India (CAG) 2020 report tabled in the state assembly on Thursday.

The municipality in 2008 proposed a ₹44.2 crore project for scientific capping of legacy waste over 1.55 lakh cubic metres in Tambaram, Alandur and Pallavaram municipalities and setting up a waste to energy plant. The local body, now part of Tambaram corporation, spent ₹17.54 crore including a penalty of ₹2.5 crore to the Tamil Nadu Pollution Control Board (TNPCB) for violating environmental norms but waste is still being dumped in the open and the scientific capping of legacy waste is yet to begin.

The project, with 35% funding from Jawaharlal Nehru National Urban Renewal Mission (JNNURM), 15% from the state government and 50% from the municipality, involved procuring machinery for primary and secondary waste collection in municipal areas and vehicles for transfer of waste to a common place in Phase 1. Phase 2 involved building transfer stations and establishing a common compost plant for scientific capping.

The Pallavaram municipal commissioner signed with Hydroair Tectonics and agreement that was terminated in 2012. The municipality incurred bank guarantee of ₹2 crore and paid the contractor ₹71.6 lakh.

Essel Infra Projects got the project in October 2012 with a completion date of August 2015, with ₹99 crore sanctioned for transfer stations and material recovery facilities in Tambaram and Pallavaram municipalities, compost yard and sanitary land fill at Venkatamangalam. Phase 1 was completed and ₹9.7 crore paid to the contractor.

Phase 2, which involves scientific capping of dumpsite, hasn't begun due to non-finalization of tariff by Tangedco and non-clearance by the Union ministry concerned. In November 2018, this project was terminated.

"...The government must fix responsibility for this lackadaisical attitude of officials and protect the financial interests by enforcing the contractual obligations and encash the bank guarantee from the contractor. The government should implement the project at the earliest to avoid accumulation of solid waste in open yards," the CAG report said.

David Manhoar, a civic activist, said this was just the tip of the iceberg. "Since 2018 several projects were implemented including a ₹1 crore bio-methanation plant which is not in use and is located on a lake bed. All this should be investigated."

---

சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் உள்ள

# துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் ₹35 லட்சம் பறிமுதல்

## லஞ்ச ஒழிப்புத்துறையினர் அதிரடி நடவடிக்கை



**சென்னை, மார்ச் 15:** சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் உள்ள துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் கணக்கில் காட்டப்படாத ₹35 லட்சம் பணத்தை லஞ்ச ஒழிப்புத் துறையினர் கைப்பற்றினர்.

சென்னை, சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் பொதுப்பணித்துறை அலுவலகம், பிற்படுத்தப்பட்டோர் நலவாரியம், ஆதிதிராவிடர் நலவாரியம், பசுமை தீர்ப்பாயம், குடிசை மாற்று வாரிய அலுவலகம், டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் அலுவலகம், மகளிர் ஆணையம், ஆறுமுகசாமி விசாரணை ஆணையம், வேளாண்மை துறை ஆணையர் அலுவலகம் மற்றும் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் 10க்கும் மேற்பட்ட அலுவலங்கள் அமைந்துள்ளன. சென்னை மாவட்டம், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகமும் அந்த வளாகத்தில் உள்ளது.

துணை ஆணையராக இருப்பவர் நடராஜன். இந்தநிலையில், இவர், தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் 30 உதவியாளர்களிடம் இருந்து கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்காக தலா ₹5 லட்சம் வீதம் லஞ்சம் பெறுவதாக லஞ்ச ஒழிப்பு துறையினருக்கு ரகசியாக தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து, நேற்று சென்னை லஞ்ச ஒழிப்பு போலீசார், சென்னை எழிலகத்தில் உள்ள துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் திடீர் என சோதனை நடத்தினர். இந்த சோதனையில் கணக்கில் காட்டப்படாத ₹35 லட்சம் பணத்தை நடராஜன் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றினர்.

இதையடுத்து, லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்து பணம் எங்கிருந்து வந்தது, ஒவ்வொரு ஊழியரிடம் எவ்வளவு வாங்கப்பட்டுள்ளது.

இதைப்போன்று ஏற்கனவே லஞ்சமாக பணம் வாங்கி கொண்டு பணி நியமனம் ஏதும் செய்யப்பட்டுள்ளதா, இதுபோன்று பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா, இந்த விவகாரத்தில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினகரன் Tue, 15 March 2022
https://epaper.dinakaran.com/c/66824253

---

# 'நோட்டீஸ்' வழங்கிய அதிகாரிகளுடன் ஏரி ஆக்கிரமிப்பாளர்கள் வாக்குவாதம்

ராமாபுரம், மார்ச் 18–
ராமாபுரம் ஏரி ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு, 350 போலீசார் பாதுகாப்புடன் 'நோட்டீஸ்' வழங்கும் பணி நேற்று நடந்தது. அப்போது, அப்பகுதியில் குடியிருப்போரில் சிலர், வருவாய் துறை அதிகாரிகளை உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தி அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம் 155வது வார்டு, 27 ஏக்கர் பரப்பளவில் ராமாபுரம் ஏரி உள்ளது.

இந்த ஏரியில் முளைத்த பல்வேறு வகை ஆக்கிரமிப்புகளால், தற்போது, 3 ஏக்கருக்கும் குறைவாக சுருங்கி உள்ளது. இங்குள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து நம் நாளிதழில் பல முறை தொடர்ந்து செய்தி வெளியாகி உள்ளது.

இந்நிலையில், ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி, ராமாபுரம் சமூகநல கூட்டமைப்பு சார்பில், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து, ஆக்கிரமிப்பு வீடுகள் குறித்து கணக்கெடுப்பு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர். இரண்டு தினங்களுக்கு முன், 'சர்வே' செய்ய சென்ற மாநகராட்சி அதிகாரிகளை, பொதுமக்கள் தடுத்து திருப்பி அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து, தி.நகர் துணை கமிஷனர் அரிகிரன் பிரசாத் தலைமையில், 350 போலீசார் பாதுகாப்புடன், 10க்கும் மேற்பட்ட மாநகராட்சி மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் இணைந்து, ஆக்கிரமிப்பில் உள்ள 395க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு நேற்று 'நோட்டீஸ்' வழங்கினர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி மக்கள் வருவாய்த் துறை அதிகாரிகளை உள்ளே விடாமல் தடுத்து, வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் சலசலப்பு ஏற்பட்டது.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலும், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் உத்தரவின் அடிப்படையிலும் ஒதுக்கப்பட்ட இடங்களையும், ஆக்கிரமிப்பு எனக் கூறி, அதிகாரிகள் நோட்டீஸ் வழங்குவதாக, அவர்கள் குற்றம் சாட்டினர்.

எனினும், பலத்த போலீஸ் பாதுகாப்புடன், அதிகாரிகள் தங்கள் கடமையை செய்தனர்.

---

# அமைத்த 3 நாளில் சரிந்த சாக்கடை தடுப்புச்சுவர்

சிவகாசி, மார்ச் 25–



இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- ஏப்ரல் 2022

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

'சென்னை காவல்துறையில் 90% அதிகாரிகள் ஊழல்வாதிகளாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர், 10% அதிகாரிகள் மட்டுமே நேர்மையானவர்களாகவும் திறமையானவர்களாகவும் உள்ளனர்' என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஊழல் அதிகாரிகளை களைந்து திறமையான அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என நீதிபதி வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Apr 2022
Due to corona published online)

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!